# <u>கள்ளக்குறிச்சி நகராட்சி</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் **2020** ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை **4.30** மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:- திரு. A. வெங்கடாசலம், B.E.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**

**<u>கூட்ட பொருள்கள்</u>**

## <u>பொருள் எண்-1</u>

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள அனைத்து வாகனங்களுக்கும் 2020–2021 ஆம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பிக்கும் பொருட்டு அவ்வப்போது பெறப்படும் பட்டியல்களுக்கு தொகை வழங்கி காப்பீடு புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | வாகன விபரம் |
|---|---|---|
| 1 | **TN32U8542** | **2005/LORRY/ SWARAJ MAZDA LTD** |
| 2 | **TN32AV0727** | **2012/JCB/BEML LIMITED** |
| 3 | **TN32AV1335** | **2012/DUMBER PLACER/ ASHOK LEY LAND** |
| 4 | **TN15S7421** | **2017/LCV/ TATA MOTARS LTD** |
| 5 | **TN15S7454** | **2017/LCV/ TATA MOTARS LTD** |
| 6 | **TN15P3121** | **2019/LCV/ TATA MOTARS LTD** |
| 7 | **TN15P3168** | **2019/LCV/ TATA MOTARS LTD** |
| 8 | **TN15P3133** | **2019/LCV/ TATA MOTARS LTD** |
| 9 | **TN32AV0552** | **2012 / LORRY / ASHOK LEY LAND** |

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 534 / 2020 /எச்1)**

## <u>பொருள் எண்-2</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் அறிவுரையின் படி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு துரித பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவுகள் வழங்கவும், பணிபுரியும் இடத்திற்கு கொண்டு செல்லவும் தனியார் ஆட்டோக்கள் (Passangers) வாகனத்தினை பயன்படுத்தப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது. அதனடிப்படையில் இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், அலுவலக பணியாளர்கள், மற்றும் கிருமிநாசினிகள் தெளிக்கும் பணியாளர்களுக்கு தினசரி உணவு வழங்கவும், அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு கொண்டு செல்ல ஏதுவாக தனியார் ஆட்டோ (Passangers) வாகனத்தினை பயன்படுத்திக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733 /11 / 2020 /எச்1)**

<u>பொருள் எண்-3</u>

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுக்கும் பொருட்டு இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கவும், அவர்களை பணிபுரியும் இடத்திற்கு வாடகை ஆட்டோ மூலம் கொண்டு செல்லும் பணிக்கு (டிரைவர் படி, டீசல் உள்பட) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் 20.04.2020 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு

| வ.எண் | திருவாளர்கள் | வாகனத்தின் எண்ணிக்கை | ஒரு நாளைக்கு வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1 | **திரு.ஆர்.ராஜதுரை<br>சுபஸ்ரீ ஆட்டோ<br>கள்ளக்குறிச்சி** | 1 எண்கள் | 1450.00 |
| 2 | திரு.அன்பரசன்<br>குமரன் ஆட்டோ<br>கள்ளக்குறிச்சி | 1 எண்கள | 1475.00 |
| 3 | திரு.ஐயப்பன்<br>செங்கேணியம்மன் ஆட்டோ<br>கள்ளக்குறிச்சி | 1 எண்கள | 1525.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு.ஆர்.ராஜதுரை, கள்ளக்குறிச்சி** என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733/11 /2020/எச்1)**

<u>பொருள் எண்-4</u>

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு வாகன முன்பணம் வழங்க கோரியுள்ளார்கள்.

| வ.எண் | பெயர் | பதவி | வழங்க கோரும் முன்பணம் |
|---|---|---|---|
| 1 | பூ.பூர்ணிமா | தட்டச்சர் | 50000/– |
| 2 | ஜி.சரண்யா | வருவாய் உதவியாளர் | 50000/– |
| 3 | எஸ்.மணிகண்டன் | பதிவறை எழுத்தர் | 50000/– |

மேற்கண்ட பணியாளர்களுக்கு வாகன முன்பணம் வழங்க கோரியுள்ளதை தொடர்ந்து அரசாணை எண்.467 நிதி துறை நாள் 22.09.2009 மற்றும் அரசு விதிகளின் படி இருசக்கர வாகனம் வாங்க ரூ.50000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கலாம். மேற்படி முன்பணத் தொகையினை அன்னாரின் மாதந்திர ஊதியத்திலிருந்து அசல் மற்றும் வட்டித் தொகையினை கணக்கீட்டு பிடித்தம் செய்யவும் அதற்காகும் முன்பணத்தொகை ரூ.1,50,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.971/2020/சி1),**

பொருள் எண்-5

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை, மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் அறிவுரைக்களுக்கிணங்க கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகராட்சி பகுதியில் கிருமிநாசினியான லைசால் 2.5%,1% சோடியம் ஹைபோகுளோரைட் போன்றவற்றை தெளிப்பதற்கு ஏதுவாக தற்போது இந்நகராட்சியில் மேற்கண்ட பணிக்காக பேட்டரி ஸ்பிரேயர்-10 எண்கள், பவர் மிஸ்ட் ஸ்பிரேயர் -6 எண்கள், டேங்கர் லாரி-1 எண்கள், மற்றும் வாடகை வாகனங்கள் - 3 எண்கள் மூலமாக கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்டு வருகிறது. மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களால் தற்போது தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வெகுவாக பரவி வருவதை தடுக்கும் பொருட்டு ராணிப்பேட்டை பெல் நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட ராட்சத ஸ்பிரேயர் (Bhel-Mister) இயந்திரத்தை – 1 எண்ணிக்கையில் இந்நகராட்சிக்கு வழங்கப்பட்டது. இயந்திரத்தினை இயக்க ஜெனரேட்டர் ஒன்றும், LCV வாகனம் ஒன்றும் தேவைப்படுவதால், பொதுமக்களின் நலன் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும் மேற்கண்ட இயந்திரத்தினை கொண்டு கிருமிநாசினிகள் தெளிக்கும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733 /4 /1/ 2020 /எச்1)**

பொருள் எண்-6

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுக்கும் பொருட்டு **ராட்சத ஸ்பிரேயர் (Bhel-Mister) இயந்திரத்திற்கு வாடகை வாகனம் (LCV) மற்றும் வாடகை ஜெனரேட்டர் பொருத்தி அதன் மூலம் நகராட்சி பகுதியில் கிருமிநாசினிகள் தெளிக்கும் பணிக்கு** பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் 10.04.2020 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | LCV வாகனம் மற்றும் ஜெனரேட்டர் எண்ணிக்கை | LCV வாகனத்திற்கு நாள் ஒன்றுக்கு வாடகை ரூ. | ஜெனரேட்டர் நாள் ஒன்றுக்கு வாடகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஜே.முஸ்தபா, ஒப்பந்ததாரர் கள்ளக்குறிச்சி | 1 எண் | 2600.00 | 1800.00 |
| 2 | **திரு.பி.நடராஜன் ஒப்பந்ததாரர் கள்ளக்குறிச்சி** | 1 எண் | **2500.00** | **1750.00** |
| 3 | திரு.ஏ.சின்னதுரை ஒப்பந்ததாரர் கள்ளக்குறிச்சி | 1 எண் | 2700.00 | 1900.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.2ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு.பி.நடராஜன், ஒப்பந்ததாரர் கள்ளக்குறிச்சி** என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733/4 /1/2020/எச்1)**

பொருள் எண்-7

மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் அறிவுரைக்களுக்கிணங்க தற்போது தமிழ்நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தினை குறித்து நன்கு உணரும் வண்ணம் பொதுமக்களுக்கு தொடர்ந்து தினசரி விழிப்புணர்வு ஆட்டோ மூலம் ஏற்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் மேற்கண்ட பணிக்கு கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதியிலும் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் ஆட்டோ மூலம் விழிப்புணர்வு குறித்த தொடர்ந்து அறிவிப்பு செய்யவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733/13 / 2020 /எச்1)**

பொருள் எண்-8

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு பொதுமக்கள் அதிகம் இடங்கள் மற்றும் அனைத்து வார்டு பகுதிகளில் ஆட்டோ மூலம் விழிப்புணர்வு (ஓட்டுனர், ஒலிபெருக்கி,டீசல் உள்பட ) செய்யும் பணிக்கு பொது மக்களின் நலன் கருதியும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் 14.04.2020 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ.எண் | திருவாளர்கள் | ஆட்டோ எண்ணிக்கை | வாடகை நாள் 1க்கு ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.மு.இஸ்மாயில்<br>பாய்ஸ் ஆட்டோ வாசவி மஹால்<br>கள்ளக்குறிச்சி | **1 Nos** | 2700.00 |
| 2 | திரு.ஆர்.மணிகண்டன்<br>விஸ்னு ஆட்டோ கமிட்டி<br>கள்ளக்குறிச்சி | 1 Nos | 3000.00 |
| **3** | **திரு.ஆர்.ராஜதுரை<br>சுபஸ்ரீ ஆட்டோ<br>கள்ளக்குறிச்சி** | **1 Nos** | **2250.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **திரு.ஆர்.ராஜதுரை, கள்ளக்குறிச்சி** என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733/13/2020/எச்1)**

பொருள் எண்-9

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய் வெகுவாக பரவிவருவதால் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 1920 சட்டத்தின் பிரிவு 15 ன் படி ஏப்ரல் 2020 ம் மாதத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு கீழ்க்கண்ட நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. **1167358**/-யை கீழ்காணும் விபரபடி நிறுவனங்களுக்கு செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

விபரம்

| வ.எண் | கோப்பு எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 733/1/2020/H1 | M/s கீரின் அக்ரோ என்வைரன்மென்ட் சர்வீஸ், மதுராந்தகம் | 167560.00 |
| 2 | 733/1/2020/H1 | M/s சத்குரு டிரேடர்ஸ், பாண்டிச்சேரி | 100000.00 |
| 3 | 733/1/2020/H1 | M/s கீரின் அக்ரோ என்வைரன்மென்ட் சர்வீஸ், மதுராந்தகம் | 395598.00 |
| 4 | 733/2/2020/H1 | திரு.ஆர்.மணிகண்டன், கள்ளக்குறிச்சி | 99000.00 |
| 5 | 733/5/2020/H1 | M/s கோகுல் அக்ரிடெக், திருவண்ணாமலை | 58000.00 |
| 6 | 733/6/2020/H1 | திருமதி.எஸ்.புவனேஸ்வரி, நெல்லிக்குப்பம் | 347200.00 |
| | | மொத்தம் | **1167358.00** |

அலுவலக குறிப்பு:-

1.பதிவு செய்யலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவரின் முன்னனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனங்களுக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3.மேற்படி பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 733/1 / 2020 /எச்1)**

பொருள் எண்-10

மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் நேரடி அறிவுரைக்கிணங்க தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ் நோய் தமிழ்நாட்டில் தீவிரமாக பரவிவருகிறது எனவும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தற்போது 4 எண்ணிக்கையில் இந்நோய் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நோய் தொற்று இந்நகரப்பகுதியில் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகர் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமலில் உள்ளது.ஆனால் பொது மக்கள் இச்சட்டத்தினை மீறி தேவையில்லாமல் வெளியில் பாதுகாப்பு உபகரணம் (முககவசம்) அணியாமல் வருகிறார்கள் எனவும், அவ்வாறு முககவசம் அணியாமல் வெளியில் வரும் நபர்களுக்கு பொது ஊரடங்கு இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவு 270 ன் படி பொதுசுகாதார சட்டம் 1939ன் படியும் தண்டனை தொகையாக ரூ.200.00 வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டது.அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் 144 தடை உத்தரவு மீறி பொது மக்கள் இச்சட்டத்தினை மீறி வெளியில் பாதுகாப்பு உபகரணம் (முககவசம்) அணியாமல் வரும் நபர்களுக்கு பொது ஊரடங்கு இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவு 270 ன் படி பொதுசுகாதார சட்டம் 1939ன் படியும் தண்டனை தொகையாக ரூ.200.00 வசூல் செய்திட மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பணியின் அவசர அவசியம் கருதி இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவு 270 ன் படி, பொது சுகாதார சட்டம் 1939ன் படியும் தண்டனை தொகை ரூ.200.00 வசூல் செய்ய தனிஅலுவலரின் முன்னனுமதி வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.வசூல் செய்யப்பட்ட தொகையினை நகராட்சி கருவூலத்தில் செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 733 / 2020 /எச்1)**

பொருள் எண்.11

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (SBM), திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2018–2019**ன் கீழ், மறுசுழற்சிக்குட்பட்ட பொருட்களை சேகரிக்கும் கூடம் (Resource Recovery Centre), பேட்டரி மூலம் இயங்கும் வானங்கள் (Battery Operated Vehicle) -21 எண்ணம் சப்ளை செய்தல் மற்றும் இலகுரக சிறிய நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ வாகனங்கள் (Light Commercial Vehicle) – 3 எண்ணம் சப்ளை செய்தல் பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை தமிழ்நாடு மாநில அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் (All Editions in the State) மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் (All Editions in the State)ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்ய கோரப்பட்டதில் **25.01.2019** அன்று தினகரன் மற்றும் டெக்கர் கிரானிக்கல் ஆகிய நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.**1,17,324/–**ஐ வழங்கக் கோரி M/s.கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண்.**3248** நாள் **25.01.2019**ல் பட்டியல்பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s.கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3778 /2018/இ1)**

பொருள் எண்.12

கள்ளக்குறிச்சி நகராட்சியில் **2018–2019ம்** ஆண்டு சாலையோர சுங்க வசூல் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த **திரு.K.முருகேசன் த/பெ காசிநாதன்** தென்கீரனூர் ரோடு ஏமப்பேர் என்பவர் **2018–2019** ஆண்டுக்கு ஆண்டு குத்தகை தொகை **ரூ.2505000/–** செலுத்தததால் அன்னாரின் குத்தகை உரிமத்தினை **31.03.2019ல்** ரத்து செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து **01.04.2019** முதல் துறைரீதியாக வசூலிக்கப்பட்டுவருகிறது. மேற்படி குத்தகைதாரர் **2018–2019ம்** ஆண்டுக்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகையினை செலுத்த கோரி அரசு வழக்கறிஞர் வழியே அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளதற்கு கட்டணம் **ரூ.3000/–** வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.3111/2018/அ1**

பொருள் எண்.13

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வீடு வீடாக சென்று முதல் நிலை சேகரமாகும் குப்பைகளை சேகரிக்க தூய்மை இந்தியா திட்டத்தின் SHPC ன் கீழ் வழங்கப்பட்ட Battery of Vehicle மின்கல ஊர்தி 27 வாகனங்கள் பெறப்பட்டு முதல் நிலை சேகரம் செய்யும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து நல்லமுறையில் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்கண்ட வாகனங்கள் அவ்வப்போது பழுது ஏற்பட்டு பயன்படுத்தும் நிலையில் இல்லை என்பதாலும், மேற்கண்ட வாகனங்கள் கொள்முதல் செய்து ஒரு வருடகாலத்தை கடந்து விட்டதாலும், மேற்கண்ட வாகனங்களுக்கு கடந்த 18.02.2020 அன்று பழுது நீக்கம் செய்ய M/s.A.S.எலக்ட்ரிகல்ல் & எலக்ட்ரானிக்ஸ், ராயப்பனூர் என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டு 5 வாகனங்களுக்கு மட்டுமே பழுதுநீக்கம் செய்யப்பட்டது. மேலும், மேற்கண்ட மின்கல ஊர்தி (BOV) வாகனங்களில் பேட்டரி பழுது ஏற்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாடு முழுவதும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் மேற்கண்ட நிறுவனத்தார் மூலம் இந்நகராட்சியின் (BOV) மின்கல ஊர்திகளை பழுதுநீக்கம் செய்ய இயலவில்லை எனவும், இதனால் நகரப்பகுதியில் முதல் நிலை சேகரம் செய்யும் குப்பைகளை சேகரம் செய்ய மிகவும் சிரமமாக உள்ளது. இப்பணி பொது சுகாதார் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்கண்ட மின்கல ஊர்திகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1020 /2020/எச்1)**

பொருள் எண்.14

கள்ளக்குறிச்சி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பேருந்து நிலையம், தினசரி மார்கெட், அம்மா உணவகம், சமுதாய கழிவறைகள், மற்றும் நுண் உரக்களம், ஆகிய இடங்களில் துர்நாற்றம் வீசப்படும் இடத்தில் லெமன் கிராஸ் ஆயில் வாசனை திரவியம் தெளித்து பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படா வண்ணம் தடுக்கவும், பொது மக்களின் நலன் கருதியும் மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி கோரி லெமன் கிராஸ் ஆயில் வாங்கி பயன்படுத்தி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்றப்பொருள் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீக்கரிக்கலாம்.
3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 765 /2020/எச்1)**

பொருள் எண்.15

கள்ளக்குறிச்சி நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து இந்நகரப்பகுதியில் 3 இடங்களில் நுண்ணுயிர் உரக்களம் (MCC) மற்றும் 12 இடங்களில் குப்பை உருவாகும் இடத்திலேயே உரம் தயாரித்தல் (OCC) ஆகிய இடங்களில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை மேற்கண்ட இடங்களுக்கு சென்று உரம் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது அவ்வாறு உரம் தயாரிக்கும் பணிக்கு E.M.சொலிவ்ஷன் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தினால், மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி E.M.சொலிவ்ஷன் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி கோரவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00லட்சத்திற்கு மன்றப்பொருள் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீக்கரிக்கலாம்.
3.செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 766 /2020/எச்1)

பொருள் எண்.16

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மின்கல ஊர்தி (BOV)வாகனத்திற்கு அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் 17.04.2020 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S. No | Items | Aikon Power Technology, Chennai | JSS Enterprises, Vaniyambadi | Shree Bhairava green lines, Jolarpet |
|---|---|---|---|---|
| 1. | 60V LED HEAD LAMP | 1156.40 | 1,364.08 | 980.00 |
| 2. | 60V DIGITAL METER | 2653.82 | 3,130.54 | 2249.99 |
| 3. | HANDEL BAR | 883.83 | 1,042.91 | 749.99 |
| 4. | T STEM | 2189.00 | 2,583.00 | 1849.99 |
| 5. | CONE BEARING | 889.82 | 1,049.98 | 749.99 |
| 6. | WHEEL BEARING | 647.82 | 763.46 | 549.99 |
| 7. | RIM | 2,476.82 | 2,921.68 | 2099.99 |
| 8. | FRONT HUB | 1414.82 | 1,668.52 | 1199.99 |
| 9. | FRONT FORKE | 3197.80 | 3,772.46 | 2710.99 |
| 10. | AXEL ROD | 329.22 | 388.47 | 279.99 |
| 11. | LEFT SIDE SWITCH | 889.82 | 1,049.98 | 749.99 |
| 12. | RIGHT SIDE SWITCH | 1156.40 | 1,364.08 | 849.99 |
| 13. | FULL WIRING KIT | 3,302.82 | 3,897.00 | 2799.99 |
| 14. | BREAK SHOE | 765.82 | 903.66 | 649.99 |
| 15. | 12V 75AH EXIED BATTERY (GEL) | 11,090.00 | 13,086.20 | 9649.99 |
| 16. | 60V 1000W BLDC MOTOR | 11,739.82 | 13,852.02 | 9949.99 |
| 17. | 60V HEAVY CONTROLLER | 10,443.00 | 12,322.74 | 8850.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | DIFFERETIAL (HEAVY) | 13,924.00 | 16,430.00 | **11800.00** |
| 19. | TORQUE LOADED GEAR BOX | 7,078.00 | 8,352.04 | **5999.99** |
| 20. | FRONT TYRE WITH TUBE HEAVY | 2,240.00 | 2,607.09 | **1899.99** |
| 21. | REAR TYRE WITH TUBE HEAVY | 2,336.38 | 2,756.92 | **1979.99** |
| 22. | MCB AUTO CUT OFF | 530.98 | 625.40 | **449.99** |
| 23. | THROTTLE | 1120.98 | 1,321.60 | **949.99** |
| 24. | IGNITION | 330.38 | 389.40 | **279.99** |
| 25. | NORMAL CHARGER | 3,302.82 | 3,897.32 | **2799.99** |
| 26. | AUTO CUT OFF CHARGER | 6,842.82 | 8,074.52 | **5799.99** |

**அலுவலக குறிப்பு:-**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **Shree Bhairava green lines, Jolarpet** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**3.**இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1020 /2020/எச்1)**

பொருள் எண்.17

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்யும் பணிக்கு பொது மக்களின் நலன் கருதியும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் **08.04.2020** அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **அளவு** | **தொகை ரூ** |
|---|---|---|---|
| **1** | **ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், செல்லப்பம்பட்டி,நாமக்கல்** | **1 லிட்டர்** | **3000.00** |
| 2 | ஸ்ரீ பிளாஸ்டோ டெக் திருமுடிவாக்கம்,சென்னை | 1 **லிட்டர்** | 3200.00 |
| 3 | டிரினிட்டி எண்டர்பிரைசஸ், சேலம் | 1 **லிட்டர்** | 3250.00 |

**அலுவலக குறிப்பு:-**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **M/s.ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், செல்லப்பம்பட்டி, நாமக்கல்** என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**3.**இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 765/2020/எச்1)**

பொருள் எண்.18

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான E.M.சொலிவ்ஷன் மருந்து கொள்முதல் செய்யும் பணிக்கு பொது மக்களின் நலன் கருதியும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் **08.04.2020** அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | **அளவு** | **தொகை ரூ** |
|---|---|---|---|
| 1 | **ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், செல்லப்பம்பட்டி,நாமக்கல்** | **1 லிட்டர்** | **895.00** |
| 2 | ஸ்ரீ பிளாஸ்டோ டெக் திருமுடிவாக்கம்,சென்னை | 1 **லிட்டர்** | 950.00 |
| 3 | டிரினிட்டி எண்டர்பிரைசஸ், சேலம் | 1 **லிட்டர்** | 960.00 |

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட **3** விலைப்புள்ளிகளில் வ.எண்.**1**ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **M/s.ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ், செல்லப்பம்பட்டி, நாமக்கல்** என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 766/2020/எச்1)**